விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk






சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 27 திங்கட்கிழமை (13.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

## தகவலறியும் ஆணைக்குழுவுக்கு பெரும்பான்மை இனத்தவர்கள்

### தமிழர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களாக அனைவரையும் பெரும்பான்மை இனத்தவர்களாக நியமித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த நியமனத்திலும் தமிழர்களைப் புறக்கணித்துள்ளதாக தெரி 15

## 13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது!



### பகிரங்கமாக கூறினார் சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

13க்கு அப்பால் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும்பொழுது, 13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளு 15

### கொழும்பில் ஒன்றுகூடிய தமிழ் - முஸ்லிம் கட்சிகள்

# கூட்டு உடன்படிக்கையில் கூட்டாக ஒப்பமிடத் தீர்மானம்



### 21ஆம் திகதி மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

**தமிழ்பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் நேற்று கொழும்பில் ஒன்றுகூடி இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளன.**

தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் நேற்று கொழும்பு பம்பலப்பிட்டி குளக்டவர் ஹோட்டலில் 15

## மீண்டும் மழையுடனான வானிலை நீடிக்கும்

(கொழும்பு)

நாடு முழுவதும் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி படிப்படியாக நிலைபெற்று வருவதால் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, மாத்தளை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு 15

### கோவிட் பாதிப்பு குறைவடைந்தால்

## பல்கலைக்கழக மாணவர்களை ஜனவரியில் அழைக்க தீர்மானம்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

நாட்டில் புதிய கொரோனா வைரஸ் பிறழ்வினால் பாதிப்பு ஏற்படாவிட்டால், அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் கல்வி 15

## அரசுடனான கூட்டணி பிளவுறும் கட்டத்தில்

### மனம் திறந்தார் மைத்திரி



(கொழும்பு)

அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கூட்டணி பிளவுறும் வாய்ப்பு உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரி 16

## அம்பாறையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டது

(அம்பாறை)

திருக்கோவில் பிரதேச சங்கமன்கண்டி, தாண்டியடி பிரதேசத்தில் பிரதான வீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு திடீரென வைக்கப்பட்ட புத்தர் சிலை நேற்று அதிகாலை அகற்றப்பட்டுள்ளது.

அம்பாறை, பொத்துவில் - கல்முனை பிரதான வீதியில் தாண்டியடிக்கும் சங்கமங்கண்டிக்கும் இடையிலான பிரதேசத்திலுள்ள காட்டுப் பிரதேசத்திலேயே இவ்வாறு புத்தர் சிலை திடீரென 16

## கொரோனா 19 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்காரணமாக நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 614 ஆக அதிகரித்துள்ளது. (4)

## வடமராட்சியிலும் எரிவாயு அடுப்பு வெடித்தது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரிமூலை பகுதியில் உள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடித்த சம்பவம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை 15

## கிளிநொச்சியில் உயிரிழந்த முதியவருக்கு கோவிட்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று உயிரிழந்த முதியவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த முதியவருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஊடாக பிசிஆர் பரிசோதனைக்காக 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. கிருஸ்ணன் மகேஸ்வரன்
அவர்களின் அன்புச் சகோதரன்



## கிருஸ்ணன் நீதிராஜா

அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி (C-3242)


# மிதிவெடி வெடித்ததில் சிறுவன் உயிரிழப்பு

(திருமலை)

மிதிவெடி வெடித்ததில் 15 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

திருகோணமலை மூதூர் தோப்பூர் அல்லேநகர் பகுதியில் நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டில் வளர்க்கப்படும் ஆடுகளுக்கு உணவு தேடி அருகாமையில் உள்ள பாலைநிலம் ஒன்றிற்குச் சென்ற வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பலத்த காயம் அடைந்த சிறுவன் தோப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## கிளிநொச்சி...

அனுப்பப்பட்ட ஒருவருக்கும், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(4)


O/L, A/L தமிழ் A சித்திக்கு
ஆசிரியர் தமிழிந்திரனின்
▢ வகுப்புகள்
▢ கருத்தரங்குகள்
077 547 8159
நிர்வாகி
STEM Zoom Centre (B865)



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. சிவராசா அருள்றாயன் அவர்களின்
அன்புத் தந்தை



## அமரர் பரஞ்சோதி சிவராசா

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி (C-3241)



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றும்
அமிர்தலிங்கம் விதன் அவர்களின்
அன்புச் சகோதரன்



## அமிர்தலிங்கம் அகிலன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி (C-3240)



# மரண அறிவித்தல்

## திருமதி சறோஜினிதேவி சிவஞானம்

திருமுறைநெறி செல்வர், சைவப்புலவர், இந்து தர்மாசிரியர், சைவசித்தாந்த பண்டிதர், M.A சைவ சித்தாந்தம், சைவநெறி செம்மல், கலாபூசணம்



திருக்கோணமலை உவர்மலையைச் சேர்ந்த சறோஜினிதேவி சிவஞானம் நேற்று (12.12.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா சிவஞானம் (ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவானந்தசோதி, இரவீந்திரன், ரதிலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுபதினி (உதவி அதிபர் - உவர் மலை விவேகானந்தா கல்லூரி), சதாநிதி (நிர்வாக உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கிண்ணியா), கஜேந்திரன் (தலைமை கணக்காளர் - வடக்கு மாகாண கல்வித் திணைக்களம்), பிரபாகரன் (ஆசிரியர் - நாமல்வத்தை அரசினர் முஸ்லிம் தமிழ்க்கலவன் பாடசாலை), நிரஞ்சனா (Group Accountant - St.John Newzealand) அவர்களின் அன்புத் தாயாரும் இராஜரட்ணம் கோகுலதாசன் (பணிப்பாளர் - விவசாயத் திணைக்களம், முல்லைத்தீவு), வேலுப்பிள்ளை தவநாதன் (ஆசிரியர் - சென். மேரிஸ் கல்லூரி, திருக்கோணமலை), குமுதினி கஜேந்திரன் (பிரதம கணக்காளர் - வட மாகாண திறைசேரி), சிவச்செல்வம் தயாளன் (Associate Director - Transport at Blubarn Consulting Engineers, Newzealand) ஆகியோரின் மாமியாரும் தவநாதன் பிரவின்ராஜ் (Electrical Engineer - Capital Maharaja Group), கோகுலதாசன் பிருத்திவிராஜன் (வடிவமைப்பு கட்டடக் கலைப்பீடம் - மொரட்டுவ பல்கலைக்கழகம்), பிரகாசினி (மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்), பிரபோதினி, சுருதிவாசினி (மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்), டினோசன், சோபிதா, அனன்ஜன் இளஅழகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 4.00 மணியளவில் திருக்கோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3244)

"தேவி கடாட்சம்"
இல. 42, தேன் தமிழ் வீதி,
உவர்மலை, திருக்கோணமலை.
077 491 1792
077 617 4202
077 554 4622
தகவல் :- குடும்பத்தினர்



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின்
இரசாயனவியல் ஆசிரியர்
திரு. ஞானச்செல்வன் அவர்களின்
அன்பு மாமனார்

## அமரர் சுப்பையா ஜெகதீசன்


தோற்றம் : 1941.11.01
மறைவு : 2021.11.13

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்
யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - யாழ்ப்பாணம் (C-3239)



# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
08.07.1938

இறப்பு
10.12.2021

யா / கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மூத்த அங்கத்தவராகவும் கல்லூரியின் வளர்ச்சிக்கு பல ஆண்டுகளாக பல செயற்திட்டங்களையும் ஆலோசனைகளையும் வழங்கி அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய

## சிவசம்பு இராஜதுரை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-3243)

பழைய மாணவர் சங்கம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 மாதங்களுக்கு தேவையான அரிசி கையிருப்பில் உள்ளது

## அரிசிக்கு தட்டுப்பாடு வராது என்கிறார் விவசாய அமைச்சர்

(கொழும்பு)

**"நாட்டில் அரிசிக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது." என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**



இரசாயன உரத்துக்கான தடையையடுத்து நாட்டில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வயல் நிலங்கள் அழியும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் எனப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டினர்.

இதற்கு ஊடகங்களிடம் பதிலளிக்கையிலேயே விவசாயத் துறை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

10 மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் இருக்கின்றது எனவும், பெரும்போகத்தின்போது தேவையான அறுவடை கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (நி-5)

# வரையறையை மீறி செலவு செய்தால் பணம் கிடைக்காது-திறைசேரி அறிவிப்பு

(கொழும்பு)

அனுமதிக்கப்பட்ட வரையறையை மீறி செலவிடும் பணம் தொடர்பான சிக்கலை தீர்க்க முடியாது போனால், திறைசேரியிடம் இருந்து பணம் கிடைக்காது எனவும் செலவுக்கான காரண விளக்கங்களை முன்வைக்க கூடாது எனவும் திறைசேரி, சகல அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது.

செலவுகளைக் கட்டுப்படுத்துவது அடிப்படையான தேவை என அடையாளம் காணப்பட்டுள்ளதால், உரிய அடையாளம் காணப்பட்ட நோக்கங்களுக்காக மாத்திரமே பணம் செலவு செய்யப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் திறைசேரி அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, காலாண்டு அடிப்படையில் நிதியை வழங்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனால், அனைத்து அரச நிறுவனங்களும் தமது செலவுகளை திட்டமிட வேண்டும்.

அத்துடன் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களை ஒதுக்கப்பட்டுள்ள நிதி அளவுக்குள் செய்து முடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

புதிய வேலைத்திட்டங்கள் அல்லது புதிய அபிவிருத்தித்திட்டங்களுக்கு நிதி வழங்கப்படமாட்டாது எனவும் திறைசேரி அறிவித்துள்ளது. (நி-5)

# விவசாயத்தை ஊக்குவிக்க காணிகளை வழங்குங்கள்

## யாழில் அத்துரலிய ரத்னதேரர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு சிங்களமும், சிங்கள மக்களுக்கு தமிழும் தெரிந்திருந்தால் 30 வருட காலமாக இடமாற்ற யுத்தம் இடம்பெற்றிருக்காது என இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்தினதேரர் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் வடமாகாண தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்ற இரண்டாம் மொழிக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டில் தற்போது இடம் பெற்று வரும் ஆட்சி சரியானதா? என்று கேள்விக்கு மத்தியில் பிரச்சினைகளை கூறுவதிலும் பார்க்க நாட்டில் உள்ள காணிகளை நாட்டு மக்களுக்கு வழங்குவதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். நாட்டில் முதுகெலும்பான விவசாயத்துறையை ஊக்குவிக்க, மக்களுக்கு காணிகளை வழங்க வேண்டும்.

காஸ் அடுப்புகள் வெடிக்கிறது. ஏன் ஒவ்வொருவரும் இயற்கை வாயுவை உற்பத்தி செய்ய முடியாது? வீட்டுக்கு ஒரு பசுவை வளர்த்தால் தொழில் முயற்சியை மேம்படுத்துவதோடு இயற்கை வாயுவையும் உற்பத்தி செய்யலாம்.

ஆகவே நாட்டை வழிநடத்துபவர்களுக்கு இன்னும் மூன்று வருடங்கள் இருக்கிறது ஆகையால் மக்கள் சிறந்த முறையில் வாழ்வதற்கு வழி அமைப்பார்கள் என நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-104)

# வாகன விலை மீண்டும் அதிகரிப்பு?

(கொழும்பு)

இலங்கையில் பயன்படுத்திய வாகனங்களின் விலை மீண்டும் பாரிய அளவு அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் வருடமும் வாகனங்களை இறக்குமதி செய்யாமல் இருப்பதற்கு அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அறிவித்திருந்த நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (நி-5)

# பாதுகாப்பற்ற கடவையில் ஆட்டோவை மோதித் தள்ளிய புகையிரதம்



(குருமன்காடு)

கொழும்பில் இருந்து யாழ். நோக்கிச் வந்த புகையிரதம் வவுனியாவில் முச்சக்கர வண்டி ஒன்றை மோதியது.

இதன்போது முச்சக்கர வண்டி சாரதி முச்சக்கர வண்டியில் இருந்து பாய்ந்தமையால் மயிரிழையில் உயிர்தப்பினார்.

நேற்று காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும்தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வந்த கடுகதி புகையிரதமானது தாண்டிக்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது குறித்த பகுதியில் இருந்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடக்க முற்பட்ட முச்சக்கர வண்டியை மோதியது.

குறித்த விபத்தின் காரணமாக சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு முச்சக்கர வண்டி இழுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அது முழுமையாகவும் சேதமடைந்துள்ளது.

முச்சக்கர வண்டியின் சாரதி விபத்தின் போது பாய்ந்தமையால் உயிர் தப்பினார்.

விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (4-5-250)

# வசந்த கரன்னகொடவின் நியமனம் தவறான தீர்மானமாகும்

## டிலான் பெரேரா

(கொழும்பு)

வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் கடற்படை தளபதி வசந்தகரன்னகொட நியமிக்கப்பட்டுள்ளமை தவறான தீர்மானமாகும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.



அத்துடன் இலங்கை கம்யூனிச கட்சியின் பொதுச்செயலாளர் டி.யு குணசேகரவை வடமேல் மாகாண ஆளுநராக நியமித்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில். கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை போன்று விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்ட பாதீட்டை எனது அரசியல் வரலாற்றில் காணவில்லை. வரவு-செலவுத் திட்டம் மீது ஆளும் தரப்பின் உறுப்பினர்களும், எதிர்த்தரப்பின் உறுப்பினர்களும் பல விமர்சனங்களை முன்வைத்தார்கள்.

சமூகத்தின் மத்தியில் பல பிரச்சினைகள் தற்போது தோற்றம் பெற்றுள்ளன. சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பிரதான பிரச்சினையாகவுள்ளது.

மக்கள் அரசியல்வாதிகளை பார்த்து பைத்தியம் என்று விழிக்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# பூஸ்டர் தடுப்பூசியை தவறவிடாதீர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பயணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள ஔடத இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். பூஸ்டர் டோஸ் எடுக்காமல் மக்கள் ஒன்று திரண்டால் இந்த வருட இறுதிக்குள் கொரோனா சுனாமி வரலாம் என அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் பூஸ்டர் தடுப்பூசி போட்டுக்கொள்ள மக்கள் மத்தியில் மீண்டும் ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்ட கபடி போட்டி யாழ்.மாவட்ட அணி சம்பியன்



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி பல ஆண்டுகளாக சம்பியன் பட்டத்தை வென்ற வவுனியா மாவட்ட அணியை வீழ்த்தி சம்பியனாகி வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்துள்ளனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரால் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஆண்களுக்கான கபடிப் போட்டிகள் கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதனால் ஆட்ட நேரம் முடியும் வரை வெற்றி வாய்ப்பு யாருக்கு என்பது கேள்விக் குறியாகவே இருந்தது.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் பலத்த போராட்டத்தில் யாழ்.மாவட்ட ஆண்கள் அணி 42:40 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

(4-60-90)



இலங்கை மெய்வல்லுநர் தரம் 1 இற்கான நடுவர் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 8 பேர் உட்பட தமிழ் மொழி மூலமான பரீட்சாத்திகள் 11 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சை அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.திருமாறன், ந.சுதேஸ்குமார், சி.வசந்தகுமார், சி.பாணுராஜா, வை.சிவகுமார், ஜே.ஜெயகாந், பி.பிரதீபன், ரி.திவாகர் ஆகியோரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சி.சிவபரன், ரி.பிரசாத், எஸ்.மயூரன் ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர். (படம்:-கனகராஜா)

# ஜப்னா கிங்ஸ் அணியின் பாடல் வெளியீடு

லங்கா பிரீமியர் லீக்கில் பங்கு பற்றும் ஜப்னா கிங்ஸ் அணியின் உத்தியோகப் பூர்வ பாடல் வெளியாகியுள்ளது.

"அடிடா மச்சா" என ஆரம்பமாகும் இந்த பாடல் இரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2467

Search for people, places and things

**வேணுஷா**

காதலியா இருக்கும் போது பேசச் சொல்லி கெஞ்சுவதும்



மனைவியாக ஆன பின்பு பேச வேண்டாம் என்று வேண்டுவதும் ஆண்களின் வீர வாழ்க்கையில் சகஜம்


**கலைவாணி**

டேய் நில்றா, நீ என்ன நல்லது செஞ்சி கிழிச்சிட்டன்னு இவ்ளோ வேகமாகப் போறாய்.?




**ஜீவா**

என்ன மச்சான் உங்க நாட்டில இப்பயே new year க்கு வெடி போட Start பண்ணிட்டிங்க போல




வெடியா, அது வெடி இல்ல மச்சான் காஸ் சிலிண்டர்

**வசி**

பார்த்து பதம்மா வாய்யா...




உன்னை நினைச்சாலே நெஞ்சம் பதறுகிறது. இன்னும் என்னென்ன சமாளிக்க போறேன் என்று தெரியல்லையே..

**வினோபா**




பெண்கள் மேக்கப் ரூமில் அலங்காரம் செய்யும் விதம்



ஆண்கள் மேக்கப் ரூமில் அலங்காரம் செய்யும் விதம்

**தர்மிலன்**

காதல் என்பது சனிக்கிழமை நைட்டு மாதிரி சந்தோஷமாதான் இருக்கும்...



ஆனா கல்யாணம் என்பது ஞாயிற்றுக்கிழமை நைட்டு மாதிரி எந்த நேரமும் திக்... திக்... என்று தான் இருக்கும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

13.12.2021
கார்த்திகை 27, திங்கட்கிழமை
தசமி பின்னிரவு 1.38 மணிவரை
ரேவதி பின்னிரவு 6.02 மணிவரை
சுபநேரம் 12.20-1.50 மணிவரை
இராகு காலம் -7.50-9.20 மணிவரை
சந்திராஷ்டமம்- பூரம்

வளவன்


மேஷம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சயனக்குறைவான நாள்.


ரிஷபம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.


மிதுனம்

மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும், செய் தொழிலில் உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.


கடகம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களினால் பலனுண்டு.


சிம்மம்

எதிர்பாராத வகையில் மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், முயற்சிகளில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம்.


கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் கூடும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.


துலாம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்,


விருச்சிகம்

பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு, பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


தனுசு

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, உற்சாகமான நாள்.


மகரம்

உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம் பெறலாம், ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுபவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செல்வ நிலை உயரும் நாள்.


மீனம்

மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், கனிவாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

முடிவு என்னும் விதை முளைக்க அமைதி என்னும் மனம் தேவை

# அமைச்சரவை இன்று கூடுகிறது

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னரான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நாடு எதிர்நோக்கும் வெளிநாட்டு கையிருப்பு விவகாரம் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் யுகதனவி மின் உற்பத்திநிலையம்தொடர்பான உடன்படிக்கை தொடர்பிலும் நாளைய அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)


## மாடிவீடு வாடகைக்கு

கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலைக்கு அருகாமையில் (அறிவியல் நகர் பிரதேசத்திற்கு அண்மையாக) புதிதாக கட்டப்பட்ட மாடிவீடு ஒன்று வாடகைக்கு உள்ளது.
அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்களுக்கு பொருத்தமானது.
தேவையானவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (C-3233) 077 065 0875


# மதிப்பீட்டறிக்கை பெற்றுக்கொள்ளல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியில் பொருத்தப்பட்டுள்ள பானை முறையிலான வடிகலன் தொகுதியை 2022 ஆம் ஆண்டில் தொழிற்படக்கூடியவாறு திருத்தம் செய்வதற்கான மதிப்பீட்டினையும்/புதிதாக வேணர் பூட்டுவதற்கான மதிப்பீட்டினையும் தனித்தனியாக இத்துறை சார்ந்த அனுபவதாரர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். மதிப்பீட்டை வழங்குவதற்காக அலுவலக வேலை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் 4.30 மணி வரை பார்வையிட்டு தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி. என்ற முகவரிக்கு 20.12.2021 திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

க.துரைசிங்கம்,
தலைவர்,
தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு) (C-3229)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வழங்குநர்களை பதிவு செய்தல் 2022

எமது சபையினால் 2022 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. காகிதாதிகள் எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சீமெந்து. ஓடுகள். கம்பி வகைகள்)
07. கற்கள். மணல்கள்
08. தீந்தை வகைகள் (Paints). நிறம் தீட்டும் பொருட்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள். துணைப்பொருட்கள்
11. மின் வழங்கு பொருட்கள். மின் பாவனைப் பொருட்கள்
12. எரிபொருட்கள். உராய்வு நீக்கி
13. இரும்பு பொருட்கள்
14. தீராந்திகள். பலகைகள் .சட்டங்கள்
15. பனைமரங்கள். சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர். ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருட்கள். கிருமி நாசினிகள்
19. பாதணிகள். தோல் பொருட்கள் மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல். பதாகைகள் அமைத்தல். ஸ்ரிக்கர் அச்சிடுதல். நூல்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள். உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்.ரயர் மாற்றுதல்
04. ஒட்டு வேலைகள். உலோக வேலைகள்
05. கனரக வாகனங்களின் சேவை. வாடகைக்கு விடல்
06. மின்சாதனங்களின் திருத்தம். மீள மின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணினி. பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம். சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி விளக்குகள் பொருத்தல்
13. வீதி. கட்டடம் புனரமைப்பு. நிர்மாண வேலை

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00(வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2022" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசாளர் தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 31.01.2022 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 0243243544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.
13.12.2021

(C-3227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லைப் பாலத்தடியில் சிற்றூர்தி- ஹன்டர் விபத்து




(கரணவாய்)

வல்லைப் பாலத்தடியில் சிற்றூர்தியும் ஹன்டர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு வாகனங்களும் பலத்த சேதம் அடைந்துள்ளன. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேலும் நண்பகல் 12 மணியளவில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு குறித்த பாலத்தில் விபத்துக்குள்ளாகின. நேற்று முன்தினம் சனிக்கிழமையும் இப்பகுதியில் ஹப்ரக வாகனம் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (4-5-60)

# அரச திணைக்கள தரப்படுத்தலில் யாழ். மாவட்ட செயலகம் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திற னான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் 2018/2019ஆம் ஆண்டினை தழுவி நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ்.மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுள் ளது.

அதேவேளை இப் போட்டித் தொடரில் கடந்த 2016 ஆம் ஆண்டில் 3ஆம் இடத்தையும் 2018 ஆம் ஆண்டில் 2ஆம் இடத்தையும் பெற்று அரச அலுவலகங்களுக்கு முன்மாதிரியான தனித்துவமான மாவட்டமாக யாழ். மாவட்டம் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-33-104)



நாவற்குழி பிரதேசத்தில் வாழ்கின்ற 25 குடும்பங்கள் மற்றும் 16 பாடசாலை மாணவர்களுக்காக "தேசிய உரிமையினை பாதுகாக்கும் அமைப்பின்" நிதி அனுசரணையில் உலருணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களும் வழங்கும் நிகழ்வானது 52வது காலாட் படைப்பிரிவினுடைய சேனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் பகுதி நேரமாக சங்கீதம், வயலின் மற்றும் ஆங்கிலம் கற்பிப்பதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட தகுதியுடைய வளவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விபரக்கோவையை நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், சண்டிலிப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.லதீபன் அறிவித்துள்ளார். (4-5)

## முகாமைத்துவப் போட்டி

# இளவாலை வடக்கு கிராம உத்தியோகத்தருக்கு முதலிடம்

(குப்பிழான்)

தெல்லிப்பழை பிரதேச செய லாளர் பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கான அலுவலக முகாமைத்துவப் போட்டியில் யாழ். இளவாலை வடக்கு (ஜே/221) கிராம உத்தியோகத்தர் திருமதி.மு. நாகபேந்தினி முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மயிலிட்டித்துறை வடக்கு (ஜே/251) கிராம உத்தியோகத்தர் க.துவாரகன் இரண்டாம் இடத்தினையும், மல்லாகம் தெற்கு (ஜே/212) கிராம உத்தியோகத்தர் திருமதி. ஜெ.பகீரதி மூன்றாம் இடத்தினையும், தையிட்டி தெற்கு (ஜே/250) கிராம உத்தியோகத்தர் திருமதி. ர.காயத்திரி நான்காம் இடத்தி னையும், தெல்லிப்பழை கிழக்கு (ஜே/227) கிராம உத்தியோகத்தர் திருமதி. ம.மாலாதேவி ஐந்தாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளனர். (4-5-18)

# கட்டப்பிராய் குளத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு கட்டப்பிராய் குளத்தை புனரமைத்துத் தருமாறு கட்டப்பிராய் கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டப்பிராய் கிராமத்தின் மையப்பகுதியில் காணப்படும் இக்குளம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படவில்லை.

இக்குளத்தின் நீர் தேங்கல் காரணமாக இரண்டு கிலோ மீற்றர் சுற்றளவிற்கு நிலத்தடி நீர் நன்னீராகக் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்குளத்தை மையமாகக் கொண்டு சலவைத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்குளத்தை புனரமைக்காவிட்டால் சிறிது காலத்தில் முற்றாக அழியும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளது.

மேலும் இக்குளத்தை புனரமைக்குமாறு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டது. ஆயினும் நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே கட்டப்பிராய் குளத்தை புனரமைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5)





## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலை வரலாற்றுக் கற்கை நெறியானது இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியிலுள்ள 108 ஆம் இலக்க விரிவுரை மண்டபத்தில் லண்டன் எக்ஸஸ்ரர் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி கில்ஜூலெஃப் மற்றும் லண்டன் லெஸ்ரர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரூத் யங் ஆகியோரின் "சமூகத்தையும் அடையாளத்தையும் கண்டடைதல்: தொல்லியலுக்கான ஒரு வகிபாகம்" எனும் தலைப்பிலான உரையையும் கலந்துரையாடலையும் ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் தொல்லியல், கலை, வரலாறு, கலாசாரத்துறை, சார்ந்தவர்கள், மரபுரிமைசார் செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வமுடைய அனைவரையும் சுகாதார வழிமுறைகளினைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி க.ரதிதரன் அறிவித்துள்ளார். (4-5)

# டிப்பர்- பேருந்து விபத்து; மூவர் மருத்துவமனையில்



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொடிகாமம்-பருத்தித்துறை பேருந்து சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்தும் டிப்பர் வாகனமும் மோதியதில் இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இவ்விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடி காமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30-60)

# 300 கிலோ கடலாமையுடன் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

300 கிலோ கிராம் எடையுள்ள கடலாமையை பிடித்து வந்த ஒருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் உடைமையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆமை உயிருடன் காணப்பட்டதால் நீதிமன்றின் அனுமதியுடன் குறிகாட்டுவான் கடலில் மீள விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-5-18-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடர்-2020

## பிரதேச செயலகங்களுக்கிடையிலான தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் 1 ஆம் இடத்திற்கான விருதினைப் பெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை வாழ்த்தி மகிழ்கின்றோம்

# 1 ஆம் இடம்

யாழ். மாவட்டத்தில் பிரதான மீள்குடியேற்ற பிரதேச மக்களைக் கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலகம் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வருவதுடன் பிரதேச செயலரின் உயர்ந்த ஆளுமை மிக்க நிர்வாகத் திறமையுடன் கூடிய நேர்ப்பாங்கான வழிகாட்டலின் கீழ் வினைத்திறனுடன் பணியாற்றி வரும் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கு சான்றாக அமைகின்றது இவ்விருது. இவ்விருதினைப்பெற உழைத்த பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எங்களது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகின்றோம்.

வாழ்த்துவோர்:

**AVR. அறக்கட்டளை,**
**வலிகாமம் வடக்கு,**
**தெல்லிப்பழை.**

(9037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் / வெளிநாடு

# அமெரிக்காவை உலுக்கிய சூறாவளி

- 70 இற்கும் மேற்பட்டோர் பலி
- கட்டடங்கள் இடிந்து விழுந்து சேதம்
- மீட்புப் பணிகள் தீவிரம்



(வோஷிங்டன்)

**மத்திய மற்றும் தெற்கு அமெரிக்காவின் சில பகுதிகளில் பலமான சூறாவளி தாக்கியதில் 70 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.**



அமெரிக்காவின் சில பகுதிகளை கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் சூறாவளி தாக்கியது.

இதன் காரணமாக கென்டக்கியில் ஒரு மெழுகுவர்த்தி தொழிற்சாலை, மேற்கு இல்லினாய்ஸில் ஒரு அமேசன் கட்டடம் மற்றும் ஆர்கன்சாஸில் உள்ள ஒரு முதியோர் இல்லம் ஆகியவை இடிந்து விழுந்தன.

மிசோரி, டென்னசி மற்றும் மிசிசிப்பி உட்பட குறைந்தது ஆறு மாகாணங்களில் சூறாவளி பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கென்டக்கியில் மட்டும் இது வரை 70 பேர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை 100 ஐ தாண்டும் எனக் கணிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு அவசர கால மீட்புப் பணியாளர்கள், தீயணைப்புப் படையிர் அனுப்பப்பட்டு மீட்புப் பணிகள் விரைவாக இடம்பெற்று வருகின்றன.

இடிபாடுகளில் இருந்து தொடர்ச்சியாக சடலங்கள் மீட்கப்பட்டு வரும் நிலையில் சூறாவளியால் ஏற்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கை இரு மடங்கு அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.(நி-5)

## பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப மறுக்கும் பெற்றோருக்கு சிறைத்தண்டனை

### கிரேக்க அரசாங்கம் அதிரடி அறிவிப்பு

(கிரீஸ்)

கொவிட் 19 தொற்றுநோயைத் தொடர்ந்து அனைத்துப் பாடசாலைகளும் சுகாதார பரிந்துரைகளுக்கு இணங்க மீண்டும் திறக்கப்பட்டவுடன் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத் தயங்கும் பெற்றோருக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்று கிரேக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாடசாலைகள் தொடங்கப்பட்டாலும் மாணவர்களின் வரவு எண்ணிக்கை மிகவும் குறைவு என கிரேக்க அரசு குற்றம் சாட்டியுள்ளது. (நி-5)

## தடுப்பூசி போட மறுத்தால் 4000 டொலர் அபராதம்

### எதிர்ப்புத் தெரிவித்து ஒஸ்திரியாவில் மக்கள் போராட்டம்



(வியன்னா)

கட்டாயத் தடுப்பூசி திட்டம் உட்பட அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஒஸ்திரியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வார இறுதி ஆர்ப்பாட்டங்களின் ஒருபகுதியாக தொடர்ந்து நான்காவது வாரமாக தலைநகர் வியன்னாவில் சுமார் 44,000 பேர் திரண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாடளாவிய ரீதியில் தடுப்பூசி செலுத்தப்பட்டபோதும் மேற்கு ஐரோப்பிய நாடான ஒஸ்திரியாவில் கடந்த மாதம் மீண்டும் முடக்கக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இந்த கட்டுப்பாடுகள் நிறைவுக்கு வரும் நிலையில் தடுப்பூசி போடாதவர்களுக்கு கட்டுப்பாடுகள் தொடரும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த பெப்ரவரி முதல் கொரோனாத் தடுப்பூசியை கட்டாயமாக்குவதற்கான அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக எதிர் கட்சிகளுடன் ஒன்றிணைந்து மக்கள் போராடி வருகின்றனர்.

தடுப்பூசி போட வேண்டும?ா என்பதை தாங்களாகவே தீர்மானிக்கும் சுதந்திரம் மக்களுக்கு இருக்க வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்து போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

எவருக்கும் வலுக்கட்டாயமாகத் தடுப்பூசி போடப்படமாட்டாது என அரசாங்கம் கூறினாலும் அதை மறுப்பவர்களுக்கு 4,000 டொலர் வரை அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## உக்ரைனை ஆக்கிரமித்தால் விளைவுகள் மோசமாகும்

### ரஷ்யாவிற்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

உக்ரைனை ஆக்கிரமித்தால் அதற்காக ரஷ்யா கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். பொருளாதார ரீதியில் கடும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வரும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்.

வோஷிங்டனில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர், உக்ரைனை ஆக்கிரமிக்க முயன்றால் ரஷ்யா தொடர்பான உலகின் நிலைப்பாடு மாற்றமடையும்.

கடந்த 2013 ஆம் ஆண்டு ரஷ்ய ஆதரவு பெற்ற அப்போதைய உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை எதிர்த்து, ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினர் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து அவர் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார்.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர்.

ரஷ்ய இராணுவ உதவியுடன் அவர்கள் கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க், லுஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளை கைப்பற்றினர்.

இந்தச் சூழலில், உக்ரைன் எல்லையையொட்டி ரஷ்யா தனது படைகளைக் குவித்து வருவதாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் எச்சரித்துள்ளன.

குளிர் காலத்தின் போது உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து தன்னுடன் இணைத்துக் கொள்ள வாய்ப்புள்ளதாக அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அச்சம் தெரிவித்துள்ளன. இது ரஷ்யா அமெரிக்கா இடையிலான பதற்றம் அதிகரித்துள்ளது.

எனினும் உக்ரைனை ஆக்கிரமிக்க தாங்கள் முயல்வதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ரஷ்யா நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



## ரஜினிகாந்த் பிறந்த நாளில் ரசிகர்கள் கேக் வெட்டி கொண்டாட்டம்

(சென்னை)

சூப்பர் ஸ்டார் ரஜினி காந்தின் பிறந்த நாள் நேற்றாகும்.

இதனையொட்டி அவரது ரசிகர்கள் நள்ளிரவு 12 மணியளில் இருந்து போயஸ் கார்டனில் உள்ள ரஜினிகாந்த் வீட்டின் முன் குவிந்தனர். அப் போது தலைவருக்கு பிறந்த நாள் [illegible] உற்சாகமாக கேக் [illegible] (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்களை அழித்து காணி அபகரிப்பு

(குருமன்காடு)

**செட்டிகுளம் மெனிக்பாம் கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்காக பயிரிடப்பட்ட உழுந்து பயிர்களைச் சேதப்படுத்தி எல்லைக் கற்களை நாட்டி காணிகளை வனவளத் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.**



மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மெனிக்பாம் கிராமத்தில் 850 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் 100இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரமாக உழுந்து செய்கையை பல வருடங்களாக செய்கை பண்ணி வருகின்றனர்.

இம்முறையும் சுமார் 100 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் உழுந்து பயிரிட்டுள்ளனர். உழுந்து பயிரிடப்பட்டு ஒன்றரை மாதங்கள் கடந்த நிலையில் அங்கு சென்ற வனவளத் திணைக்களத்தினர் பூத்துக் காணப்பட்ட உழுந்து செடிகளுக்குள் தமது உழவு இயந்திரத்தை ஓட்டிச் சென்று எல்லைக் கற்களை நாட்டியுள்ளனர்.

இதனால் பலரது உழுந்து செய்கை சேதமடைந்துள்ளது.

வனவள திணைக்கள அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற குறித்த செயற்பாடு தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் கவலையும் அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர். (4-5-250)

விபத்துக்களை தடுக்க

## வல்லைப் பாலத்தை சீமெந்து பாலமாக மாற்றுக

### பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

வல்லை பாலத்தை சீமெந்து பாலமாக்க மாற்றுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வல்லைப் பாலம் இரும்பால் அமைக்கப்பட்டுள்ளது. மழை காலங்களில் இப்பாலம் வழுக்குவதன் மூலம் தொடர்ச்சியாக பல விபத்துக்கள் நடைபெறுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நேற்றுக் காலையும் விபத்துகள் ஏற்பட்டுள்ளன.

இதற்கான காரணம் பாலத்தின் வழுக்கு நிலையே என சாரதிகள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வீதி பிரதான வீதியாக அமைவதனால் விபத்துக்களை கட்டுப்படுத்த இரும்புப் பாலத்தை அகற்றி சீமெந்து பாலத்தை அமைக்குமாறும் இப்பொழுது இருக்கும் இரும்புப் பாலம் பழுதடைந்து தேய்ந்து உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே மழைகாலங்களில் விபத்து நடைபெறாமல் இருப்பதற்கு சீமெந்து பாலம் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-60)

## மீனுக்கு போட்ட தூண்டிலில் சிக்கியது குண்டு



(அராலி)

யாழ்ப்பாணம் மடம் வீதியில் உள்ள கால்வாய் ஒன்றில் மீன்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் தூண்டிலில் திடீரென ஒரு பாரமான பை அகப்பட்டது. சிறுவர்கள் அதனை தூக்கி பார்த்த போது அப் பையில் துருப்பிடித்த நிலையில் குண்டு ஒன்று இருந்தது அவதானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. யாழ். பொலிஸார் குறித்த குண்டினை நீதிமன்றத்தின் அனுமதி பெற்று விசேட அதிரடிப்படையின் உதவியுடன் மீட்கவுள்ளதாக தெரிவித்தனர்.

(4-5-104)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சங்கானை பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை காலை 09 மணி முதல் பிற்பகல் 02 மணி வரை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வருடாந்த இரத்ததான முகாம் நிகழ்வு இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-18)

## காணியை தமக்கு வழங்குமாறு அலைகரை குடியிருப்பாளர்கள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக் குளம் குளத்தின் அலைகரைப் பகுதியில் குடியிருக்கும் 32 குடும்பங்கள் குறித்த காணியை தமக்கு வழங்குமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக் குளம் குளத்தின் அலைகரைக் பகுதிக்குரிய காணிகளில் வீடுகள் அமைத்து குடியிருக்கும் 32 குடும்பங்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்திக் திணைக்களத்தால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் இடம் பெற்று வருகின்றது.

அதில் 6 பேருக்கு எதிரான வழக்குகள் நிறைவுக்கு வந்துள்ள நிலையில், குறித்த 6 குடும்பங்களையும் குளத்தின் காணியை விட்டு வெளியேறுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளதாக கமநல அபிவிருத்திக் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து 32 குடும்பங்களும் இவ் விடயம் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுவிடம் மகஜர் கையளித்தனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக அபிவிருத்திக் குழு தலைவர் தெரிவித்தார். (4-5-250)

## விவசாய காணிகளுக்கான பாதையை புனரமைக்குமாறு கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊரியான் குளக்கரையில் இருந்து தட்டுவன் கொட்டி வரையுள்ள பாதையை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊரியான் குளக்கரையில் இருந்து தட்டுவன்கொட்டி வரையில் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் விவசாய நிலமாக காணப்படுகிறது. 40 வருடங்களாக இந் நிலத்தில் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதை சேறும் சகதியுமாக காணப்படுகிறது. விவசாயத்திற்கு தேவையான உரவகைகளையும் மருந்துகள் மற்றும் நெல்லையும் தலையில் சுமந்து செல்லும் நிலையே உள்ளது.

வாகனங்களில் கொண்டு செல்ல முடியாது. அப் பாதைகளால் பயணிப்பது மிகச் சிரமம். வாகனங்கள் வந்தால் புதையுண்டு போகும் நிலையே உள்ளது. 2019 ஆம் ஆண்டு பத்திரிகைகளில் வெளியான செய்தியை அடுத்து அரைவாசிப் பகுதி புனரமைப்பு செய்யப்பட்டது.இன்னும் மீதிப் பகுதிகளில் இதுவரை எந்த புனரமைப்பு வேலைகளும் இடம்பெறவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மூலம் எமக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம் என அவர்கள் தெரிவித்தனர். (4-5)

## துவிச்சக்கரவண்டியை மோதியது டிப்பர் ஒருவர் படுகாயம்



(வவுனியா)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் டிப்பர் - துவிச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாய மடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா, புளியங்குளம் இராமனூர் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற வரை அதே வழியில் வந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளது. இவ்விபத்தில் டிப்பர் வாகனத்தின் கீழ் பகுதியினுள் துவிச்சக்கரவண்டி சிக்குண்டதுடன், துவிச்சக்கர வண்டியில் சென்றவர் காயங்களுடன் உயிர் தப்பினார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-299-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிபஸ் குடைசாய்ந்து விபத்து இரு சிறுவர்கள் உட்பட 16 பேர் காயம்

(கொழும்பு)

புத்தளம் - வண்ணாத்தி வில்லு பகுதியில் மினி பஸ்ஸொன்று, வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி 5 அடி பள்ளத்தில் வீழ்ந்து குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

இதில் 16 பேர் காயமடைந்தனர். நேற்று முன்தினம் எலுவாங்குளம் பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற மினி பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.



இதன்போது இரண்டு சிறுவர்கள் உட்பட 16 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந் நிலையில் பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வண்ணாத்திவில்லு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## கல்வி, ஞானம் தரும் வைகாசி விசாகம்



அழகு என்பதற்கு மறு பெயர் முருகு. அழகு உள்ளவன் முருகன். அழகன் முருகன் தோன்றிய திருநாள் வைகாசி விசாகம். அதனால் முருகனை விசாகன் என்றும் விசாகப்பெருமாள் என்றும் அழைக்கின்றனர். வைகாசி விசாகத்தை முருகனின் பிறந்த தினமாக மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.

பிறப்பும், இறப்பும் அற்ற இறைவனுக்கு வருடத்தில் ஒருநாள் பிறந்த தினமாக கொண்டு அவனை ஆராதனை செய்து தீபஆராதனைகள் செய்து மகிழ்கின்றனர். 'அன்பெனும்பிடியில்அகப்படும்மலையே' என்பதற்கேற்ப முருகப்பெருமானும் பக்தர்களின் அன்பு பிடியில் சிக்குண்டு அவர்களின் நன்மையின் பொருட்டு அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு அருள்புரிகின்றான்.

சரவண பொய்கையில் விழுந்த அந்த பொறிகள் ஆறு குழந்தைகளாயின. அந்தக் குழந்தைகளை ஆறு கிருத்திகை பெண்கள் எடுத்து வளர்த்தனர். அந்த ஆறு குழந்தைகளையும் பராசக்தி எடுத்து அணைக்க ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் கொண்ட ஒரே ஒரு குழந்தையாக மாறின.

முருகன், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் 'கார்த்திகேயன்' என்றும், பக்தர்கள் ஒவ்வொருவர் மனதிலும் வசிப்பதால் 'குகன்' ஆகவும், சரவண பொய்கையில் இருந்து வந்ததால் 'சரவணபவன்' என்றும், ஆறு முகங்களை கொண்டவராக இருப்பதால் 'ஆறுமுகன்' என்றும் அழைக்கப்படுகிறார்.

முருகப்பெருமான் பாலபருவத்தில் லீலைகள் பல செய்தார். பிரம்மாவுக்கு 'ஓம்' என்ற மந்திரத்தின் பொருள் தெரியாததால் அவரை சிறையில் அடைத்தார். தந்தைக்கு பாடம் சொல்லி 'தகப்பன் சாமி' என்ற பெயரை பெற்றார்.

தமிழ் மூதாட்டி அவ்வையிடம் நாவற்கனியை கொடுத்து சுட்ட பழம் வேண்டுமா?, சுடாத பழம் வேண்டுமா? எனக்கேட்டு அறிவுச் சுடராய் திகழ்ந்தார். கனிக்காக உலகையே சுற்றி வந்து தண்டாயுதபாணியாய் பழனியில் தனித்து நின்றார். பின்னர் அவர் தேவர்களின் தேவ சேனாதிபதியாகி சூரனை வென்று தேவ சேனாதிபதி எனப்பெயர் பெற்றார். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என பேதமில்லாமைக்கு தெய்வானை, வள்ளியை மணமுடித்து உலகிற்கு உணர்த்தினார்.

தீமைகளை அழித்து, நன்மைக[illegible] முருகனின் தோற்றம்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## கொட்டக்கலையிலும் காஸ் அடுப்பு வெடித்து சிதறியது



(கொட்டக்கலை)

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டக்கலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ பிரிவில் உள்ள வீடு ஒன்றில் காஸ் அடுப்பு வெடித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

தேநீர் தயாரிப்பதற்காக காஸ் அடுப்பை பற்ற வைத்து 5 நிமிடங்களுக்கு பிறகு காஸ் அடுப்பு வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக குறித்த வீட்டிலுள்ளவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## 'ஆசியாவின் இளவரசி' இலங்கையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய "Blue Sapphire" எனக் கூறப்படும் மாணிக்க கல் ஒன்று இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த மாணிக்க கல்லிற்கு ஆசியாவின் இளவரசி என பெயரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கல் 310 கிலோ எடையுடைய என தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 320 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 800 | 700 |
| தக்காளி | 550 | 500 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 50 |
| கோவா | 370 | 350 | 400 | 450 |
| கரட் | 450 | 440 | 480 | 450 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 300 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 240 | 240 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 600 | 400 | 480 | 450 |
| லீக்ஸ் | 320 | 300 | 400 | 400 |
| பீற்றூட் | 160 | 140 | -- | 280 |
| கறிமிளகாய் | 600 | 1000 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 550 | 800 | -- | 800 |
| போஞ்சி | 300 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 280 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | 220 | 200 | 220 |
| வெங்காயப்பூ | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 140 | 180 | -- | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 70 | 60 |
| வல்லாரை | 30 | 35 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | 160 | 100 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 அத்தியாவசியப் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை

## வருட இறுதிவரை அமுலில் இருக்கும் என்கிறார் வர்த்தக அமைச்சர்

(கொழும்பு)

**சதொச வர்த்தக நிலையங்களில், 50 அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் வருட இறுதி வரையில், சதொச வர்த்தக நிலையங்களில் சில வகையான அரிசிகளை 100 ரூபாய்க்கும் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாடு அரிசி ஒரு கிலோ கிராம் 99 ரூபாய் 50 சதத்திற்கும் சிறந்த சம்பா அரிசி



ஒரு கிலோகிராம் 130 ரூபாய் அளவிலும் சதொச வர்த்தக நிலையங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

எந்தவொரு அரிசி வகையையும் சதொசவில் தலா 5 கிலோகிராம் அளவில் பெற்றுக் கொள்ள முடியும்.

சீனி ஒரு கிலோகிராம் 125 ரூபாய்க்கும் பருப்பு ஒரு கிலோ கிராம் 240 ரூபாய்க்கும் நூடில்ஸ் ஒரு பொதி 125 ரூபாய்க்கும் சவர்க்காரம் உள்ளிட்ட 50 பொருட்களை, சந்தையில் நிலவும் விலையை விடவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.(நி-5)

# பண்டிகைக் காலத்தில் மீண்டும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு?

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் சுமார் 1500 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை டொலர் தட்டுப்பாடு காரணமாக விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொள்கலன்களில் உருளைக்கிழங்கு, கடலை, செத்தல் மிளகாய், பருப்பு மற்றும் மசாலா உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருட்கள் இருப்பதாகவும் அவற்றின் மதிப்பு 150 மில்லியன் டொலர் முதல் 200 மில்லியன் டொலர் வரை இருக்கும் என்றும் கூறப்படுகிறது. (நி-5)

# குற்றங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சாரதி அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சாரதி ஒருவர் செய்யும் குற்றங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யும் முறையொன்றை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பு நகரில் ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி போக்குவரத்து நெரிசலைக்



குறைக்கும் வேலைத்திட்டத்தை பார்வையிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் 5 அல்லது 6 நிமிடங்களில் சொந்த கிரெடிட் கார்ட்டினூடாக அல்லது போக்குவரத்துக் குற்றங்களுக்கான வேறு வழிகளில் தண்டப் பணம் செலுத்தி சாரதி அனுமதிப்பத்திரத்தை மீளப் பெறுவதற்கான வழியை நாங்கள் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# புத்தாண்டிற்குள் மரக்கறி தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் என எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்குள் மரக்கறித் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் என மரக்கறி வியாபாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் மரக்கறி வகைகளுக்கான தட்டுப்பாடு நீடிக்குமானால் தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் மேலும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போது மரக்கறிகளின் மொத்த விலை 300 ரூபாயிலிருந்து அதிகரித்து இருப்பதால் வியாபாரத்தை எடுத்துச் செல்வது கடினமாகவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## வாய்ப்புகள் வலிய வருமா?

பெரும்பாலும் வராது என்றே சொல்லி விடலாம். நாம் தாம் அவற்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வாய்ப்புகள் மாறி மாறி நம் வீட்டுக் கதவைத் தட்ட வேண்டும் என்று விரும்புகிறவர்கள், முதலில் எல்லோருடனும் நன்கு பழகக் கூடிய இயல்புடையவர்களாக விளங்க வேண்டும்.

பலருடன் பழக வேண்டும் என்பதற்காகப் பணம் செலவழிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இன்முகம், அன்புச் சொற்கள் போதும்.

பயணங்களின் போதோ எதிர்பாராத சூழ்நிலைகளிலோ எவரையேனும் சந்திக்க நேர்ந்து, அவர்களும் விரும்புவதாகத் தெரிந்தால் அவர்களுடன் நன்கு பேசிக் கொள்ளலாம். புதியவர்களின் அறிமுகம் பல வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதைச் செய், அதைச் செய்யாதே என்று உள்மனம் திடீரென ஒலிக்க ஆரம்பிக்கும். இது ஏன் என்று, நமக்குப் புரியாது. ஆனால் மனத்திற்கு உள்ள மகத்தான சக்திகளுள் இதுவும் ஒன்று. இத்தகைய உள்மனக் குரல்களுக்கு மதிப்புக் கொடுங்கள். அப்படி மதிப்புக் கொடுத்து நடப்பீர்களானால் நீங்கள் வியக்கும் வகையில் வாய்ப்புக்கள் வந்து சேரும். அப்போது உள்மனத்தின் முடிவு மிகச்சரியாக இருப்பதை உணர்வீர்கள். உண்மையின் அடிப்படையில் நடக்கும். இனம் புரியாத ஆற்றலின் வெளிப்பாடு அது.

முன்னேற்றம், உயர்வு பற்றிய நினைப்பே எப்போதும் இருக்க வேண்டும். இது ஒரு வகை விழிப்புணர்வு. இத்தகைய உணர்வு, சாதாரண நிலைமையைக் கூட நல்லதொரு வாய்ப்பாக உருவாக்கிக் கொள்ளக்கூடிய திறமையைத் தவிர வேறு ஏதுமன்று.

வாய்ப்பு என்பது நாற்புற வாயில்கள் உள்ள ஒரு கோட்டை. அதை எல்லா வழியாலும் அடைய முயல வேண்டும். ஒரு பக்கத்து வாயில் மூடியிருப்பதைக் கண்டு சோர்ந்து தளர்ந்து உட்கார்ந்து விடக் கூடாது.

சமய சந்தர்ப்பங்களை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். வாய்ப்புகளைப் பெறுவதற்கான எல்லாவித முயற்சிகளையும் செய்து முடித்துவிட்ட மனப்பூர்வமான திருப்தி நமக்கு இருக்கிறதா? என்ற கேள்வியை, நம்மை நாமே ஒருமுறை கேட்டுக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சூழ் நிலைகள் உருவானால், வாய்ப்புகள், வலிய வந்து நம் வீட்டுக் கதவைத் தட்டும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சாம்பல் நிற முயலும் குள்ள நரியும்

'ஓ சிவப்புக் கொண்டைச் சேவலே, உன்னால் அது முடியாது? முதலில் ஓநாய் வந்தது.

நரிக்குப் பயந்து அது ஓடி விட்டது. பிறகு எருது வந்தது. அதுவும் அஞ்சி நடுங்கி பாய்ந்தோடி விட்டது.


கரடியாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்போது நீ எனக்கு உதவுகிறேன் என்கிறாய். நீயும் தோற்றுத்தான் போவாய்.

'சந்தேகப்படாதே முயலே" நாம் முயற்சி செய்து பார்க்கலாம்" என்றது சேவல்.

அவை இரண்டும் நரியை விரட்டியடிக்கப் புறப்பட்டன. முயலின் வீட்டை அடைந்ததும் சேவல் எழுச்சியான குரலில் பாடலொன்றைப் பாடியது.

'செந்நிறக் கொண்டையன் தலையுயர்த்தி வருகிறான்!

பந்தாடப் போகிறான் பண்பற்ற நரியையே! வீட்டைத் திறந்து முயலையும் குடியேற்றப் போகிறான்! நரித் தோலை உரித்து தோரணமும் கட்டுவான்!"



குள்ள நரி பயந்து நடுங்கியது. அது கெஞ்சும் குரலில் சொன்னது 'திரு செந்நிறக் கொண்டையன் அவர்களே, ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள்? ஒரே ஒரு நிமிடம் மட்டும் பொறுத்துக் கொள்ளுங்கள் ஐயா!? நான் என் பொருட்களையெல்லாம் எடுத்துக்கொண்டு கிளம்பிவிடுகிறேன்" ஆனால் சேவல் தொடர்ந்து வீரத்துடன் பாடியது.

'சேவல் வருகிறான் வாள்கொண்டு! இரு துண்டாய் ஆகுமே உன் தலையும்!

குள்ள நரி நைசாக கதவைத் திறந்தது.? பிறகு விருட்டென்று தாவி ஓட்டம் ஓட்டமாக ஓடிப்போனது. அதன் பிறகு சேவலும் முயலும், அந்த வீட்டில் என்றும் இணை பிரியாத நண்பர்களாக வசித்தன.

(முற்றும்)

# மகாபாரதம்




பின் அவரை நோக்கி கௌசிகன், "தருமமுணர்ந்தவரே! உயிர் எவ்வாறு பிறப்பை அடைகிறது? எப்படி புண்ணிய பாவ கர்மங்களின் சம்பந்தத்தை அடைகிறது" என வினவ தருமவியாதர் கூறலானார்.

கௌசிகன், தரும வியாதரை நோக்கி, "உயிர் எவ்வாறு பிறப்பை அடைகிறது? எப்படி புண்ணிய பாவ கர்மங்களின் சம்பந்தத்தை அடைகிறது?" என வினவ, தரும வியாதர் கூறலானார்.

"உயிர் கர்ப்பத்தில் சேரும் போதே புண்ணிய பாவ கர்மமும் அதனுடன் சேர்ந்து விடுகின்றன. அவ்வாறு கர்ப்பத்தில் சேரும் நல்வினைப் பயனால் நல்ல பிறப்பும், தீவினைப் பயனால் தீய பிறப்பும் உண்டாகின்றன.

தான் செய்த வினைக்கு ஏற்பப் பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு, துன்பம் ஆகிய வற்றைச் சம்சாரத்தில் உயிர்கள் அனுபவிக்கின்றன.

கர்மத் தொடர்பு காரணமாகவே உயிர்கள் ஆயிரக்கணக்கான விலங்கு கதிகளில் பிறப்பதும் நரகத்தை அடைவதுமாக மாறி மாறி அல்லல் படுகின்றன. கர்மத் தொடர்பினால் பிறப்பு, இறப்புகளில் பல வகையான துன்பங்களை அடைந்து சக்கரம் போல உயிர்கள் சுழலகின்றன.

அறவோன் இன்பக் காரியங்களில் இன்பத்தை அனுபவிக்கிறான். தருமத்தின் நிழலில் தங்குகிறான். தருமம் செய்து சம்பாதித்த பொருளைக்கொண்டு மென்மேலும் தரும்ம் செய்து புண்ணியத்தை ஈட்டுகிறான்.

தருமத்தையே எப்போதும்செய்து கொண்டு தருமம் என்னும் மரத்தின் அடிவேரில் ஈரத் தன்மையை உண்டாக்குகிறான்.

அதனால் புண்ணியப் பலன் பூவாகி, காயாகி, கனியாகி அவனைச் சுவர்க்கத் திற்கு அழைத்துச் செல்கிறது. மறுமையிலும் அவன் இன்பம் தொடர்கிறது. ஒரு ஞானி விருப்பு, வெறுப்புக் கொள்வதில்லை.

படிப்படியாக மோட்ச மார்க்கத்தில் சென்று முக்தி அடைகிறான்" என்றார் தரும வியாதர்.

"தரும வியாதரே! நல்வினை, தீவினைகளைப் பற்றி மேலும் விளக்க வேண்டும்" என கௌசிகன் கேட் டான்.

வியாதர் கூறினார், "மனிதனுக்கு ஒரு பொருளைக் கண்டவுடன் அதனைப் பெற மனம் விழைகிறது. பல வழிகளில் முயன்று அதனை அடைகிறான். அதனை அனுபவிக்கையில் மென்மேலும் ஆசை உண்டாகிறது.

மென்மேலும் அப்பொருளை நாடி அலைகிறான். ஆசைக்கு இடையூறு ஏற்படுகையில் சினம், ஆத்திரம் முதலிய தீய பண்புகள் உண்டாகின்றன. இவற்றால் கவரப்படும் மனிதனின் புத்தி நலத்தைப் பற்றி எண்ணுவதில்லை. அந்த மனிதன் வஞ்சனையாகத் தர்மவானைப் போல வேஷம் போட்டு பணத்தைத் திருடுகிறான்.

இப்படிப் பொருள் சேர்த்ததும் கர்வம் அடைகிறான். அப்போது யார் அறிவுரைகளும் அவன் காதில் விழுவதில்லை. ஆகமத்தில் இல்லாததை எல்லாம் இருப்பதாகச் சாதிக்கிறான்.

பொருளாசையால் அதருமம் மூன்று வகையில் தோன்றுகிறது. பாவத்தை அவன் மனம் சிந்திக்கிறது. வாய் பேசுகிறது. கை செய்கிறது. அவன் எப்போதும் அதருமத்தில் மூழ்கிக் கிடப்பதால் அவனது நற்குணங்கள் அணைத்தும் அழிகின்றன.

இத்தகையோனுக்கு இதே குணங்கள் உள்ளவனே நண்பனாகிறான். இதனால் பாவம் மேலும் துணிந்து செயற்படுகிறது.

இவற்றையெல்லாம் எவன் சான்றோர் மூலமாகவும் அறிந்து கொள்கிறானோ அவன் நற்செயல்களைச் செய்வதிலும், பெரியோரைப் போற்றுவதிலும் சிறந்து விளங்குகிறான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுள்ளவனைப் பணிவாலும் வலிமையுள்ளவனைப் பேதத்தாலும், காரியகாரனைத் தானத்தாலும், சமமானவனைத் தண்டத்தாலும் ஜெயிக்க வேண்டும். – *வாரியார்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டுச்சேர்ந்தவர்கள் இதயசுத்தியோடு நடந்தால்...

தமிழ் பேசும் மக்கள் சார்ந்த அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு சிறுபான்மை இன மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க முற்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதில் தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி ஆராய்வது பொருத்தமானது.

பொதுவில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையின்மை காரணமாக தமிழ் மக்கள் இன்றுவரை ஆற்றலைகின்றனர்.

தவிர, தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடாததன் காரணமாக, வெளிநாடுகளும் ஈழத் தமிழர்களின் விடயத்தில் அசமந்தப் போக்கைக் கொண்டுள்ளன.

அதிலும் குறிப்பாக, அண்டை நாடான இந்தியா தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபட்டு ஒருமித்துக் குரல் கொடுக்காதவரை, இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தாம் தலையிட முடியாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு நன்கு தெரியும்.

எனினும் தத்தம் அரசியல் சுயநலனுக்காக தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்தன.

இந்த நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையை முன்னெடுப்பதில் பொது அமைப்புகள் கடும் முயற்சி செய்தன.

அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை, தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டதாயினும் ஒற்றுமையை விரும்பாத சிலர் பேரவையை வேரறுக்கும் துரோகத்தைச் செய்தனர்.

இந்த நிலையில் இப்போது இன்னொரு முயற்சியாக தமிழ் – முஸ்லிம் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துகின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

அந்தவகையில் நேற்றைய தினம் (12) தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்கள் கொழும்பில் கூடி நிலைமையை ஆராய்ந்துள்ளனர்.

இதில் ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் பங்குபற்றவில்லையாயினும் ஒற்றுமைப்பட்டுக் கலந்துரையாடுகின்ற அரசியல் தரப்புகள்; இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் – சிறுபான்மை மக்களின் உரிமை விடயத்தில் காத்திரமான செயற்றிட்டங்களை முன்னெடுத்தால், அது விடயத்தில் வெளிநாடுகளின் வகிபாகத்தைப் பெற்றால் அதன்போது மக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும்.

அதேநேரம் இப்படியான ஒற்றுமை முயற்சிகளைக் குழப்புவதற்கு உள்ளும் புறமும் கடும் பிரயத்தனங்கள் நடக்கும். விசமத்தனமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் கூட்டுச்சேர்ந்தவர்களின் பயணம் இதய சுத்தியோடு நடந்தால் வெற்றி நிச்சயம்.

# நாட்டை கடன் பொறியில் தள்ளிவிட்ட பொறுப்பிலிருந்து மகிந்த விலக முடியாது

## எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டை கடன் பொறியில் தள்ளிவிட்டவர் மகிந்த ராஜபக்ச எனவும் அதற்கான பொறுப்பில் இருந்து அவர் விலகிவிட முடியாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச இந்த நாட்டின் ஜனாதிபதியாக பதவிக்கு வந்திருக்காவிட்டால், தற்போதும் நாட்டிற்குள் வழமையான பொருளாதாரத்தை முன்னெடுத்து செல்ல கூடியதாக இருந்திருக்கும்.

2005 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த கடன் 2 ஆயிரத்து 222 பில்லியன் ரூபாய். இந்த கடனுடன் வணிகக் கடன்களை பெற்று நாட்டை பொருளாதாரரீதியாக அதல பாதாளத்திற்கு கொண்டு செல்ல ஆரம்பித்தவர் மகிந்த ராஜபக்ச.

அவரது சகாக்கள் தற்போது என்ன கூறினாலும் அவரால் இதில் இருந்து விலகிச் செல்ல முடியாது. நாட்டின் கடன் பொறியில் தள்ளியமைக்கான பொறுப்பை மகிந்த ராஜபக்ச ஏற்றே ஆக வேண்டும்.

மகிந்த ராஜபக்ச பெற்றுக்கொண்ட கடன்களை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் பலன்கள் கிடைக்கவில்லை. தாமரைக் கோபுரம், சூரிய வெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானம், அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற வருமானம் பெறமுடியாத திட்டங்களை உருவாக்கி நாட்டை கடனாளியாக்கினார்.

எவ்வித வருமானமும் கிடைக்காத திட்டங்கள் ஊடாக அரசியல் திட்டங்களே முன்னெடுக்கப்பட்டதால், நாடு தற்போது கடனில் சிக்கியுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு எவராலும் தீர்வை தேட முடியாதுள்ளது. கோட்டாபய ராஜபக்ச எந்தளவுக்கு முயற்சித்தாலும் அதனை செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (4)

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர்கள் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கூடி யுத்த காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஒரு பகுதியினர் மற்றும் யாழ். முஸ்லிம் சமூக பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகளைக் கேட்டறிந்து வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தவிசாளர் ஓய்வுநிலை நீதியரசர் நவாஸ், ஆணைக்குழுவின் உறுப்பினரும், யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (4-18-33-104)

## வவுனியாவில் விபத்து; இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா வைரவபுளியங்குளத்தில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைரவபுளியங்குளம் கிராம அலுவலகர் அலுவலகத்திற்கு முன்பாக உள்ள உணவகத்திற்கு குருமன்காட்டிலிருந்து துவிச்சக்கர வண்டியை செலுத்தியவர் திடீரென்று குறித்த உணவகத்திற்கு திரும்ப முற்பட்டபோது வவுனியா நகரிலிருந்து குருமன்காடு நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதன்போது துவிச்சக்கரவண்டியை செலுத்தியவரும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரும் விபத்திற்குள்ளாகி காயமடைந்து அங்கிருந்தவர்களினால் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-299)

## மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, 3வது குறுக்கு தெரு, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, மாதனை, நெல்லண்டை- வல்லிபுரம் கோவில் பருத்தித்துறை வீதி, புனிதநகர், சிவப்பிரகாசம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வைரவப் புளியங்குளம் ஆதி விநாயகர் கோவிலடி, நெடுங்குளம், சூரிய மின் உற்பத்தி நிலையம், மறக்காறம்பளை- கணேசபுரம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பெற்றோர் தவம் பிள்ளைகள் நலம்



மருத்துவம் என்பது நோய் வந்த பிறகு தீர்ப்பது மாத்திரம் அன்று. நோயே வராமல் காக்கலாம். நோய் என்றால் என்ன? இயற்கையாக நம்முடைய உடலிலே இந்தச் சுகத்திற்கு, அதாவது உடல் நலத்திற்கு ஏற்ற எல்லாம் அமைந்து இருக்கிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற குறையைக் கூட சரிக்கட்டிக் கொள்ளக் கூடிய அளவுக்கு இயற்கையினுடைய ஆற்றல் அமைப்பு நம் உடலிலே இருக்கிறது. ஒவ்வொரு செல்லும் (Cell) ஒரு இரசாயனச் சாலையாக (Laboratory) வேலை செய்து கொண்டு இருக்கிறது நம்முடைய உடலிலே. நாம் அதைத் தெரிந்து கொண்டு ஒத்துழைத்தால் போதும் அதைக் கெடுக்காமல் இருந்தால் போதும். அதைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

கருவமைப்புக் குறித்தும் அதிகமாக நினைவில் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் எந்த முறையிலே மனம், உடல் அமைப்பிலே இருக்கின்றார்களோ அதை ஒட்டித்தான் ஒரு குழந்தை உருவாக முடியும். மரத்தை ஒட்டித்தான் விதை இருக்கும். அந்த விதையை ஒட்டித்தான் மரம் இருக்கும். இது தொடர் நிகழ்ச்சி.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொன்னால், பெற்றோர்கள் மன நலத்திலே, உடல் நலத்திலே நலம் உள்ளவர்களாக அமைய வேண்டும் இருக்க வேண்டும். பெற்றோர்கள் இடத்திலே ஒருவருக்கு [illegible]னால், நமது உடலிலே முக்கியமான சக்தியாகிய சீவகாந்த ஆற்றல் [illegible] கூடியதாகவே அமையும். அது குழந்தைகளையும் பாதிக்கும். ஆகவே, மனநலமும், உடல் நலமும் காத்து இனிமை காப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

31

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



மேற்கண்ட கண்டுபிடிப்புகளை 1,500 ஆண்டுகளுக்கு முன் நிகழ்த்தியிருக்கிறார் ஆரியபட்டர். எந்த நவீன வசதியும் இல்லாத காலத்தில், தனது நுண்ணறிவை மட்டுமே பயன்படுத்தி இந்த மகத்தான உண்மைகளை நூலாக்கியுள்ளார் அவர். தனது கண்டுபிடிப்புகளை நிரூபிக்க சக்ர யந்திரம், சங்கு யந்திரம், சாயா யந்திரம், தணுர் யந்திரம், சாத்ர யந்திரம், யஷ்டி யந்திரம் ஆகியவற்றையும் அவர் வடிவமைத்தார். காலக் கணக்கீட்டுக்காக நீர்க் கடிகாரத்தையும் அவர் உருவாக்கினார்.

அவர் உருவாக்கிய காலப் பகுப்பு அட்டவணைகளே பின்னாளில் பாரதத்தில் பஞ்சாங்கமாக வடிவெடுத்தன. பாரதத்தில் மட்டுமல்லாது ஈரான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளிலும் ஆரியபட்டரின் நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டே ஜலாலி நாட்காட்டி (Jalali Calendar) கடைப்பிடிக்கப்படுகிறது.

கணிதம், திரிகோணவியல், வானியல், காலப் பகுப்பியல் உள்ளிட்ட துறைகளில் நவீன விஞ்ஞானிகளுக்கு மூலவராக ஆரியபட்டர் திகழ்கிறார். எனவேதான், இந்தியாவால் 1975 இல் இஸ்ரோ விண்ணில் செலுத்திய முதல் செயற்கைக்கோளுக்கு 'ஆரியபட்டா' என்று பெயர் சூட்டப்பட்டது. அவரது நினைவைப் போற்றும் வகையில் 2010 முதல் பீகாரில் ஆரியபட்டா அறிவு பல்கலைக்கழகம் செயற்படுகிறது.

ஆரியபட்டரின் அடியொற்றி, வராஹமிகிரர், பாஸ்கரர், பிரம்ம குப்தர், யதிவிருஷபர், ஶ்ரீதரர், மகாவீரர், ஹேமசந்திரர் உள்ளிட்ட கணித, வானியல் மேதைகளின் பெரும் படை பாரதத்தில் உருவானது. அந்த ஞானப்பெருக்கின் தொடர்ச்சியாகவே இந்திய விஞ்ஞானிகள் உலக அளவில் இன்று முத்திரை பதித்து வருகிறார்கள்.

### ஆரியபட்டரின் எண் முறைமை

ஆரியப்பட்டர் அகரவரிசை எண்களைக் கொண்ட ஒரு எண் குறியீட்டு முறைமையைக் கண்டுபிடித்தார். இந்த எண் முறைமையில் சமஸ்கிருத எழுத்துக்கள் எண்பெறுமானங்களாகப் பயன்படுகின்றன. மெய் எழுத்துகள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை வர்கா (varga) எழுத்துக்கள் அவர்கா (avarga) எழுத்துக்கள் ஆகும்.

33 சமஸ்கிருத மெய் எழுத்துக்களில் முதல் மெய் எழுத்து क (க) இலிருந்து म (ம) வரையான 25 எழுத்துக்களால் 1 முதல் 25 வரையான எண்கள் குறிக்கப்படுகின்றன. இவை வர்கா (varga letters) குழு எழுத்துக்கள் ஆகும். இவை உரு 26 இல் காட்டப்பட்டுள்ளது.

உரு 26
ஆரியபட்டர் எண் முறைமை
வர்கா மெய் எழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ka | kha | ga | gha | ṅa |
| क | ख | ग | घ | ङ |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ca | cha | ja | jha | ña |
| च | छ | ज | झ | ञ |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| ṭa | ṭha | ḍa | ḍha | ṇa |
| ट | ठ | ड | ढ | ण |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| ta | tha | da | dha | na |
| त | थ | द | ध | न |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| pa | pha | ba | bha | ma |
| प | फ | ब | भ | म |
| 21 | 22 | 23 | 24 | 25 |

30, 40, 50, 60, 70, 80, 90, 100 ஆகிய எண்கள் அவர்கா (avarga letters) य (ய) முதல் ह (ஹ) வரையிலான மெய் எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றன. உயிரெழுத்துகளுக்கான பெறுமானங்கள் अ (அ) இலிருந்து औ (ஔ) வரைக்கும் உரு 26 (ஆ) இல் காட்டியது போல் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது ஆரியபட்டா எண் அமைப்பில், சமஸ்கிருத எழுத்துக்கள் क எழுத்து முதல் म வரையிலான 25 எழுத்துக்கள் 1 தொடக்கம் 25 வரையான பெறுமானங்களைக் கொண்டுள்ளன. म முதல் ह வரையிலான எழுத்துக்கள் 30, 40, 50... 100 பெறுமானங்களைக் கொண்டுள்ளன.

उरु 26 अ

உரு 26 அ
ஆரியபட்டர் எண் முறைமை
அவர்கா மெய் எழுத்துக்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ya | ra | la | va | śa | sa | sa | ha |
| य | र | ल | व | श | ष | स | ह |
| 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 | 100 |

உரு 26 ஆ
ஆரியபட்டர் எண் முறைமை
உயிர் எழுத்துக்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| a | i | u | ṛ | ḷ | e | ai | o | au |
| अ | इ | उ | ऋ | ऌ | ए | ऐ | ओ | औ |
| 1 | 100 | $10^4$ | $10^6$ | $10^8$ | $10^{10}$ | $10^{12}$ | $10^{14}$ | $10^{16}$ |

इ எழுத்து பயன்படுத்தப்படும் போதெல்லாம் பெறுமானம் 100 ஆல் பெருக்கப்படுகிறது. उ எழுத்து பயன்படுத்தப்படும்போது, பெறுமானம் 10,000 ஆல் அதிகரிக்கும். ऋ பயன்படுத்தினால் அது எண்ணை 1,000,000 ஆல் பெருக்கும்.

### இந்து-அரபு எண் முறைமை

இந்தோ- அராபிய எண்முறை கி.மு. 700களில் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த முறை மெதுவாக, உலகளாவிய அளவில் மேம்படுத்தப்பட்டாலும், முக்கிய பகுதியான பூச்சியம் பிரம்மகுப்தர் என்பவரால் கி.மு.628 இல் வழங்கப்பட்ட பின்பே முக்கிய நிலையை அடைந்தது.

0 (எண்) கண்டறியப்பட்டு 10 இலக்கங்கள் வரையான எண் உருக்களைத் தாண்டி இடஞ்சார் குறியீடு, அறியப்பட்ட பின்னே இந்த எண்முறை புரட்சிகர வளர்ச்சி அடைந்தது. இதுவே கணிதத்தின் மிக முக்கிய படிநிலை எனக் கருதப்படுகிறது.

கால் புள்ளி இடும் முறையானது பொதுவாக எண்களை விரைவாகவும் எளிதாகவும் படிக்கப் பயன்படுகிறது. இது உலகின் பல்வேறு இடங்களில் மாறுபாடுகளைக் கொண்டுள்ளது.

### இந்து-அராபிய எண்ணுருக்கள்

முதலில் இந்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த எண்ணுருக்களை "இந்து எண்ணுருக்கள்" எனப் பெர்சிய-அராபியக் கணிதவியலாளர்கள் அழைத்தனர். பின்னர் அராபிய வணிகர்கள் மூலம் மேற்கு நாடுகளுக்கு இவை பரவியதால் ஐரோப்பாவில் "அராபிய எண்ணுருக்கள்" என அழைக்கப்பட்டன.

இது பண்டைய இந்தியத்துணைக் கண்டத்தில் கண்டறியப்பட்டபின் பக்தாத் நகரில் இருந்த அரபு கணிதவியலாளர்கள் மூலம் மேற்கு உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டது. அவற்றின் தற்போதைய வடிவம் வட ஆபிரிக்காவில் உருவாக்கப்பட்டது. அது வட ஆபிரிக்க நகரமான பிஜையா என்ற ஊரில் இருந்த இத்தாலிய அறிஞரான ஃபிபொனாச்சியால் ஐரோப்பாவில் அறிமுகமானது. பின்னர் ஐரோப்பிய வணிகம், நூல்கள், காலனித்துவத்தின் மூலம் உலகம் முழுவதும் பரவியது.

இலத்தீன் எழுத்துக்கள் மற்றும் நவீன காலத்திற்கும் 0 1 2 3 4 5 6 7 8 9. ஐ இணைப்பாக்கும் முறையாக எண் அச்சு முறை பயன்படுகிறது. 0 ஐ உள்ளடக்கிய முதல் எழுத்துமுறை 9 ஆம் நூற்றாண்டில் குவாலியர் என்னும் மத்திய இந்திய நகரத்தில் கி.பி. 870 இல் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகிறது.

பல்வேறு செப்புத் தகடுகளில் கண்டறியப்பட்ட இந்திய ஆவணங்கள் 0 (எண்) ஆனது கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருவதை விளக்குகிறது. இந்தோனேசியா மற்றும் கம்போடியா கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் இவை கி.மு. 683 முதல் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கிறது.

அராபிய எண்ணுரு முறைமையின் தோற்றம் பற்றிய பல்வேறு கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பின்வருவனவும் அவற்றுள் அடங்கும். (1) இது சீனாவில் தோற்றம் பெற்றது. (2) இது அல்கவாரிஸ்மிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. (3) இது மத்திய கிழக்கில் தோன்றியது. (4) இந்திய எண்ணுரு முறைமையின் மேற்கு நோக்கிய பரவலே அராபிய எண்ணுரு.

இவ்வாறான ஒவ்வொரு கோட்பாட்டிலும் வெவ்வேறு அளவு உண்மையிருந்தாலும், இக் கோட்பாடுகளை ஆதரிப்பவர்கள் தங்கள் தங்கள் கோட்பாடுகளுக்குச் சாதகமானவற்றை மட்டும் பெருப்பித்துக் காட்டுகிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியிலும்...

இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வியாபாரிமூலைப் பகுதியில் நேற்று காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளரால் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4,60)

## பல்கலைக்கழக...

நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் ஜனவரி மாதமளவில் அழைக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தற்போது 25 வீத மாணவர்களே அழைக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சில பல்கலைக்கழக விடுதிகளில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியுள்ள காரணத்தினால், அவர்களை மீளவும் அழைத்தால் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடையே கோவிட் தொற்று பரவும் அபாயம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## கூட்டு உடன்படி...

ஒன்றுகூடி இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஆராய்ந்தன.

இதன்போது தமிழ்பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மீண்டும் எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பில் சந்தித்து பேசுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம், கூட்டு தீர்மானமொன்றில் கையெழுத்திடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் முழுமையாக நிறைவேறும்வரை சமஷ்டி அடிப்படையிலான அதிகார பரவலாக்கல் அமுலாகும்வரை - அதன் முதல்படியாக, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட வலுவான உடன்படிக்கையான இலங்கை - இந்திய உடன்படிக்கையில் வாக்களித்ததன்படி 13, 16ஆவது திருத்தங்களை முழுமையாக அமுல்படுத்த வேண்டும், அடுத்தபடிமுறையாக சமஷ்டி அடிப்படையிலான நிரந்தர அரசியல் தீர்வு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தை கோருவதே இந்த கூட்டு முயற்சியின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து தமிழ்த் தரப்புகளும் ஒன்றுபட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்த கோரிக்கையை முன்வைப்பதென்றும் இதற்காக இந்தியப் பிரதமரை சந்திப்பதென்றும் மேற்படி கூட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி, குளக் டவர் ஹோட்டலில் நடந்த நேற்றைய கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், புளொட் ஐ பிரதிநிதித்துவப்படுத்தி ஆர். இராகவன், ஈ.பி.ஆர்.எல்.எப்ஐ பிரதிநிதித்துவப்படுத்தி க.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்றைய சந்திப்பின் முடிவில் அனைத்து கட்சிகளும் கையெழுத்திடுவதற்கான ஆவணம் ஒன்றையும் ரெலோ சார்பில் தயாரித்து முன்வைத்திருந்தது.

இந்த ஆவணத்தில் உடனடியாக கையெழுத்திட முடியாது. 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த கோருவது விசப்பரீட்சையாக அமைந்துவிடும். சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எதிர்நோக்கியிருக்கும்போது, 13ஐ கோர முடியாது. ஆவணத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டுமென இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எனினும், கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் சம்பந்தனின் குழப்பத்தை தீர்த்தனர். 13தான் தமிழர்களின் நிரந்தர தீர்வு. அதை அமுல்படுத்துங்கள் என கோரவில்லை. ஒரு இடைக்கால ஏற் பாடாகவே 13, 16ஆவது திருத்தங்களை அமுல்படுத்த கோருகிறோம். சமஷ்டி அடிப்படையிலான நிரந்தரத் தீர்வை பெறுவதற்கு முன்பான இடைக்கால ஏற்பாடாகவே இது கோரப்படுகிறது. நிரந்தர தீர்வு இதோ வருகிறது, அதோ வருகிறது, தைப்பொங்கலிற்கு வருகிறது, தீபாவளிக்கு வருகிறது என மக்களையும் ஏமாற்றி, எம்மை நாமே திருப்திப்படுத்திக் கொண்டிருக்க, மறுபுறத்தில் எமது காணி மற்றும் எஞ்சியிருக்கும் அதிகாரங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன.

அவற்றை தடுத்து நிறுத்த இடைக்கால ஏற்பாடு தேவை. விடுதலைப் புலிகள் கூட, அரசியல் தீர்வின் முன் இடைக்கால நிர்வாக ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தனர். மிகப்பலம் பொருந்திய நிலையிலேயே அவர்கள் அதற்கு தயாராக இருந்தார்கள் என விளக்கம் கொடுத்தனர்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வலியுறுத்திக் கொண்டு, 13ஆவது திருத்தத்தை கோரும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

எனினும், நிரந்தர தீர்விற்கு முன்னதாக இடைக்கால ஏற்பாடாக அதை ஏற்கலாம். அதற்கு முன்னதாக கடிதத்தில் சிறிய மாற்றம் செய்ய வேண்டும் என்றார்.

இதையடுத்து, அனைத்து கட்சிகளும் தமது திருத்தங்களை 21ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதென்றும், 21ஆம் திகதி மீண்டும் கூடி, திருத்தங்களை இறுதி செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (4)

## தகவலறியும்...

விக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலறியும் உரிமைக்கான சட்டத்தின் 12ஆம் பிரிவின் முதலாம் சரத்திற்கான கட்டளைகளுக்கு அமைய இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (4)

## 13ஐ அமுல்...

மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் "தமிழர் தம் அபிலாசைகளில் சர்வதேச நாடுகளின் கரிசனை தொடர்பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு" என்ற தலைப்பில் நடை பெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் படித்த ஆற்ற லுள்ள இளைஞர்களுக்கு முன்னுரிமை என்று நாங்கள் தீர் மானித்தோம். ஆனால் அது வேட்புமனுவில் காணப்படவில்லை. 2022ஆம் ஆண்டு தமிழ் மக்களைப் பொறுத்த வரை மிக முக்கியமான ஒரு ஆண்டாக இருக்கலாம். சாணக்கியன் போன்ற ஐந்தாறு இளைஞர்களை நாங்கள் களமிறக்கியிருந்தால் நாட்டையே தலைகீழாக மாற்றி இருப்போம்

மாறுகின்ற உலகத்திலேயே நாங்கள் நிறைய மாற்றங்களை உள்வாங்கவேண்டும். சமஷ்டி என்ற சொல் அன்றும் இருந்தது. இன்றும் இருக்கின்றது. ஆனால் சமஷ்டிக்கான விளக்கம் தற்போது மாறி விட்டது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பிரித்தானிய உயர்ஸ்தானிகரை சந்தித்த பொழுது பிரித்தானியாவில் அன்றிருந்ததைப் போன்று இலங்கையிலும் யாப்பை அறிமுகப்படுத்தினீர்கள்.

ஆனால் இன்று உங்கள் நாடு எங்கேயோ சென்றுவிட்டது. எமது நாடோ பின்னோக்கி சென்றுவிட்டது என்றார்.

சம்பந்தன் அன்றைய சிந்தனையோடு இருக்கவில்லை. புதியதையும் உள்வாங்குகிறார். அதனாலேயே இன்றும் அவர் எமக்குத் தலைவராக இருக்கின்றார்.

13க்கு அப்பால் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும்பொழுது, 13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அப்போதைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ 13க்கு அப்பால் சென்று அர்த்தபுஷ்டியான தீர்வைத் தருவோம் என்கிறார்.

ஆனால் சில தமிழ் கட்சித் தலைவர்களோ 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த கோருகின்றனர்.

13ஆம் திருத்தம் அடிப்படையிலேயே பழுதுபட்டது. அதனை திருத்த முடியாது என இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்.

13ஆம் திருத்தத்தில் சில முக்கியமான நல்ல விடயங்கள் உள்ளன. அவற்றையும் சேர்த்துக் கொண்டு அதையும் தாண்டிய அதிகாரப்பகிர்வை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் என்றார். (4)

## மீண்டும் மழை...

கூறியுள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான கனமழையை எதிர்பார்க்கலாம் என திணைக்களம் அறிவித்துள்ளது. (4)
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் தையலகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும்
முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**Sun Tailoring**
No.266 B, C.Ponnampalam Lane, Jaffna.
**077 474 5735** (9034)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், மயிலிட்டி B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**076 890 9259**
**077 015 0353** (9042)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
**TECHNO WORLD**
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பப்பிரிவு

### இறுதிச் செயலமர்வு

A/L 2021 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரியது

08 and 09 JANUARY 2022 - தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
15 and 16 JANUARY 2022 - பொறியியல் தொழினுட்பவியல்
உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்
22 and 23 JANUARY 2022 - ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஊடகக் கல்வி

### அனுமதி இலவசம்

கருத்தரங்கிற்கு ஏன் சமூகமளிக்க வேண்டும்...
- 5 வருடமாக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்...
- A/L பரீட்சை வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களால் கருத்தரங்கு மேற்கொள்ளப்படுகிறது.
- பரீட்சையை எதிர்நோக்கிய வினாக்கள் அடங்கிய வினாத்தாள் கையேடுகள் விடைகளுடன் வழங்கப்படும்.

அனுமதிகளை 01.01.2022 இற்கு முன்னர் மேற்கொள்ளவும்
இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகில் 0770175346 (C-3238)

# பொருளியல்
## கருத்தரங்கு A/L 2021

# S.Jeyakumar
(B.A(Hons) Econ Spl, M.A.in.Econ (Pera), P.G.D.E)

- ✓ பரீட்சை எதிர்பார்ப்பு வினாவிடைகள்
- ✓ புள்ளித்திட்ட விளக்கம்
- ✓ தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்

ஆரம்பம் : 14.12.2021 செவ்வாய்க்கிழமை 2.30pm
இடம் : New Science Hall, Jaffna.

Zoom செயலி மூலமும் இடம்பெறும்

வெளி மாணவர்களும் இணைந்துகொள்ளலாம். (8999)

**T.P : 0777238597, 0764207927**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9008)
**076 825 7716** (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - **077 679 6623** (9035)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(Lanka Farm அருகாமையில்)
1 பரப்பின் விலை 12 இலட்சம்

**077 658 5999**
**077 623 4204** (9043)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 6113**

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 3536**



### அருள்

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- **076 443 1576** (C-3230)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுன்னாகம், கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
14 அடிப் பாதையுடன்
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (9036)
**077 814 7389, 070 705 1655**


## அம்பாறையில்...

வைக்கப்பட்டது.

இதனையறிந்த பிரதேச பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் நேற்று ஒன்றுகூடி இச்செயற்பாட்டைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த சிலையை வைப்பதற்கு முறையான அனுமதியை பிரதேச சபையில் பெற்றிருக்கவில்லை எனத் தெரிவித்து, பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் பொத்துவில் பிரதேச சபையின் செயலாளர் முறைப்பாடொன்றினையும் பதிவு செய்திருந்தார்.

இவ்வாறான எதிர்ப்புகளையடுத்து சங்கமன்கண்டி பகுதியில் வைக்கப்பட்ட சிலையை இரண்டு நாட்களுக்குள் அங்கிருந்து அகற்றுவதாக பொலிஸார் நேற்று வாக்குறுதி வழங்கினர்.

இந்நிலையில் புத்தர் சிலை நேற்று அதிகாலை அகற்றப்பட்டது. (4)

## அரசுடனான...

வித்தார்.

கேகாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டணியொன்றை முன்னெடுத்து செல்வதா? இல்லையா? என்ற பொறுப்பு அதனை ஏற்படுத்தியவர்களின் கைகளிலேயே உள்ளது. அதனை அவர்கள் சரிவர நிறைவேற்றாத பட்சத்தில் கூட்டணி பிளவுபடுவதற்கான வாய்ப்புள்ளது.

தகவல் அறியும் சட்டத்தை செயலிழக்கச் செய்ய அரசாங்கம் முயற்சிக்கிறது. இவ்வாறு தகவல் அறியும் சட்டத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துவது கவலையளிக்கின்றது எனவும் தெரிவித்தார். (4)


## வீட்டு வேலையாட்கள் தேவையா?

வயோதிபரை பராமரிக்கக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவையா?
**077 773 3368** (9041)

## வீட்டு வேலையாட்கள் தேவை

வீட்டு வேலை, வயோதிபர் பராமரிப்பு வேலைகள் செய்யக்கூடிய பெண் வேலையாட்கள் தேவை. (தங்கி நிற்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.) (9039)
**077 773 3368**

## விரைவு பொதிகள் சேவை
## V2 TRAVELS
## UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | புத்தூர் | கோப்பாய் |
| நெல்லியடி | கொடிகாமம் | மானிப்பாய் |
| புதுக்குடியிருப்பு | சுன்னாகம் | கிளிநொச்சி |
| பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | சாவகச்சேரி |

**0768226240** DHL (C-3215)

## கனடாவில்
## வேலைவாய்ப்பு WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA / DEGREE
ஆங்கில அறிவு (C-3237)



அனைத்து துறைகளிலும் அனுபவம் அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
**0777-068-777**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.